
POLICE

# அடுத்ததாக என்ன செய்யலாம்?

வன்முறையின்போது உதவி மற்றும் ஆலோசனை



# அடுத்ததாக என்ன செய்யலாம்? - வன்முறையின்போது உதவி

**பேர்ண் மாநில போலீசார்எந்த நேரத்திலும் உங்கள் பாதுகாப்பிற்காக சேவையில் உள்ளனர். எமக்குள்ள கடமைகளாக, மக்களை குற்றச்செயல்களில் இருந்து பாதுகாப்பதும் அவர்கள் சட்டத்தைக் கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கண்காணிப்பதுமாகும்.**

பொதுவாகப் பார்த்தால்: சுவிஸ் ஒரு பாதுகாப்பான நாடு. ஆனால் இங்கும் குற்றச்செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன- உள்நுழைவதற்குத் தடையில்லாத பொது இடங்களான பூங்காக்கள் மற்றும் உணவுச்சாலைகள், தொடரூந்து மற்றும் பேரூந்து அல்லது தொடரூந்து நிலையங்கள், அத்துடன் தனிப்பட்ட சூழமைவான இணையத்தளம் போன்றவையாகும். உங்களுக்காகவே போலீசார் உள்ளனர்: ஒரு குற்றச்செயலால் நீங்கள் பாதிக்கப்பட்ட வராகவோ அல்லது அதற்குச் சாட்சியாகவோ இருப்பின் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள். ஆபத்து வேளைகளில் உடனடியாக போலீசாரின் அவசர அழைப்பைத் தொடர்பு கொள்ளுங்கள் 112 அல்லது 117.

**உங்கள் பாதுகாப்பிற்காக பேர்ண் மாநிலப் போலீசார் பின்வரும் ஆலோசனையை வழங்குகின்றனர்:**

## வன்முறை

ஆபத்தான வேளைகளைத் தவிர்த்துக் கொள்வ துடன் உங்கள் மன உணர்வை செயலாக்கு ங்கள். மாலை வேளைகள்- மற்றும் இரவு நேரங்களில், நீங்கள் வேறு மனிதர்களுக்கு அண்மையாக நின்றுகொள்வது சிறந்தது.

> உங்களைச் சீண்ட விடாதீர்கள் மற்றும் நீங்களும் சீண்டாதீர்கள்.

> நிற்கும் முறை, வெறுப்புச் சைகை காட்டுவது, பார்வையில் வெறுப்பது மற்றும் உங்கள் பேச்சால் நீங்கள் தன்நம்பிக்கையுடையவரெனக் காட்டிக்கொள்வது.

> அறியாதவர்களை „நீங்கள்“ எனக் கதைப்பதுடன் உங்களுடன் இடைவெளி வைத்துக் கொள்ளுங்கள்.

> அங்கிருக்கும் மனிதர்களிடம் துணிந்து உதவியைக் கோருங்கள் அல்லது உங்களை அவதானிக்குமாறு செய்துகொள்ளுங்கள்.

> ஆபத்து வேளையாக இருப்பின். போலீசாருக்கு அறிவியுங்கள் (அவசர அழைப்பு 112 அல்லது 117) - ஒருமுறை அழைப்பதிலும் பார்க்க பலமுறை கூடுதலாக அழைப்பது விரும்பத்தக்கது!



## பாலியல் தொந்தரவு

வார்த்தைகளால், நடைமுறையால் அல்லது செய்கையால் பாலியல் தொந்தரவு செய்வது சுவிசில் தண்டனைக்குரியது. பாலியல் தொந்தரவு அதிகமாக தனிப்பட்ட இடங்களில் (உதாரணமாக கழகங்களில் அல்லது பொதுவாக வசிக்கும் இடங்களில்) அல்லது தொழிலகங்களில் நடைபெறுகின்றது. அத்துடன் வெளியிடங்களிலும் பாலியல் தொந்தரவுகள் இடம்பெறுகின்றது, உதாரணமாக தொடரூந்துகளில், பேரூந்துகளில், பூங்காக்களில் அல்லது ஓய்வுநேர இடங்களான காப்பிக் கடைகள் அல்லது நடன மண்டபங்கள் போன்றவற்றில்.

> நீங்கள் தெளிவாக வார்த்தைகளாலும் நிறுத்தும் /சைகைகளாலும் தேவைப்படின் துணிவுள்ள எதிர்ப்பாலும், அதை நீங்கள் விரும்பவில்லை என்பதைக் காட்டுங்கள்.


> இதில் சம்பந்தப்படாத நபர்களிடம் துணிவுடன் உதவியைக் கோருங்கள் அல்லது உங்களை அவதானிக்கும்படி செய்யுங்கள் உதாரணமாக சத்தமாக உதவி அல்லது „நிறுத்து“ என சத்தமிடுங்கள்.

> பொறுப்பான நபருக்குத் தெரிவியுங்கள் உதாரணமாக ஆசிரியர், கழகங்கள்- அல்லது மண்டபப் பொறுப்பாளர், பேரூந்துச் சாரதி அல்லது பாதுகாப்பு நபர்கள்.

> நீங்கள் நடந்தவற்றை இரகசியமாக வைக்காதீர்கள்! உங்களுக்கு நம்பிக்கையான ஒருவருடன், ஆலோசனை நிலையம் மற்றும்/அல்லது போலீசா ருடன் கதையுங்கள்.

## வீட்டு வன்முறை

எமது சமூகம் எந்த வடிவமான வன்முறையை யும் சகித்துக் கொள்வதில்லை வீட்டிற்குள்ளும். குடும்பத்திற்குள்ளுமாக இருந்தாலும் சகித்துக் கொள்வதில்லை! கேவலப்படுத்துவது, தொடர்பு கொள்ளத் தடைவிதித்தல், பணத்தைப் பறித்துக் கொள்ளல், திட்டுவது, கைகலப்பு அத்துடன் உடலுக்கு தீங்குவிளைவிப்பது, பாலியல் தாக்குதல்கள் மற்றும் தொந்தரவுகள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் தண்டனைக் குரியதாகும். இவ்வேளைகளில் அனைத்து நபர்களும், அதாவது உதாரணமாக பிள்ளைகள், அயலார் அல்லது நண்பர்கள், போலீசாருக்கு அறிவிக்கலாம். இதன்பின் போலீசார் விசாரணையை மேற்கொள்வர்.



> நீங்கள் இரகசியமாக வைக்காதீர்கள்! ஒரு ஆலோசனை நிலையத்துடன் மற்றும்/அல்லது போலீசாருடன் கதையுங்கள்.

> முக்கிய தொலைபேசி இலக்கங்களை ஒரு பட்டியலாக நீங்கள் எழுதி வைத்திருங்கள் (போலீசார் 112 அல்லது 117, நம்பிக்கையான நபர்கள் போன்றவற்றை).

> ஆபத்தின்போது எங்கு உதவியைப் பெறலாமென முன்பாகவே கதைத்துக் கொள்ளுங்கள், உதாரணமாக ஒரு அயலவரிடம்.

> முக்கிய பத்திரங்களை ஒரு நம்பிக்கையான நபரிடம் கொடுத்து வைத்திருங்கள்.

வெளியில் உள்ள நபருக்கு:

- ஆபத்து வேளைகளில்: தாக்குவதற்கு முன்பாக தன்னைப் பாதுகாத்துக் கொள்வது முதன்மையானது - தாமதிக்காமல் போலீசாருக்கு அறிவியுங்கள் மற்றும் உங்களை ஆபத்தில் சிக்க வைக்காதீர்கள்!
- வீட்டில் நடைபெற்ற வன்முறைவிடயமாக இருந்தால்:
  - சம்பந்தப்பட்ட நபரிடம் நீங்கள் உங்கள் சந்தேகத்தைத் தெரிவியுங்கள்.
  - சம்பந்தப்பட்ட நபரிடம் நீங்கள் அவருக்காக உள்ளதாகத் தெரிவியுங்கள்.
  - சம்பந்தப்பட்ட நபருக்கு இலவசமான ஆலோசனை நிலையம் குறித்து அறியச் செய்யுங்கள்.
  - சம்பந்தப்பட்ட நபரை, ஆலோசனை நிலையத்திற்கு அல்லது போலீசாரிடம் அழைத்துச் செல்ல உதவி வழங்குவதாகத் தெரிவியுங்கள்.
- வெளியில் உள்ள நபரும் ஆலோசனை நிலையத்தைத் தொடர்பு கொண்டு உதவி பெற முடியும்.

போலீசார் அழைக்கப்பட்டால், அவர்கள் வன்முறை செய்த நபரை வேறு நடவடிக்கை களுடன் வெளியே அனுப்புவதுடன் அவரை பல நாட்களுக்கு வீட்டிற்குள் திரும்பவும் வர முடியாதபடி தடை விதிப்பர். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் பெரிய ஆபத்துக்கள் இருப்பின் அவர்கள் இரகசியமாகவுள்ள ஒரு பெண்கள் இல்லத்தில் பாதுகாத்து வைக்கப்படுவர்.

குடும்பத்தோடு பின்பாக சேர்ந்து கொண்ட நபர்கள், வன்முறையை எதிர்கொண்டதால் தமது கணவன் அல்லது மனைவியைப் பிரிந்தால், அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட வதிவிட அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக நீங்கள் வன்முறை அனுபவங்களை உறுதிப்படுத்தல் மற்றும் வைத்திய அத்தாட்சி, போலீஸ் அறிக்கை அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆலோசனை நிலையத்தின் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## கட்டாயத் திருமணம் மற்றும் கட்டாயத் தாம்பத்தியம்

சுவிசில் ஒவ்வொரு நபரும் தாம் எவரைத் திருமணம் செய்ய விரும்புகிறார் என்பதை சுயமாகத் தீர்மானித்துக்கொள்ள முடியும். கட்டாயப்படுத்துவது மற்றும் அழுத்தம் கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் திருமணம் செய்யப்பட்டால் அது செல்லுபடியாகாது. அத்துடன் ஒருவர் தனது தாம்பத்தியத்தில் தொடர்ந்து இருக்கப் போகின்றாரா அல்லது பிரிந்து செல்லப் போகின்றாரா என்பதும் அவரவது சொந்த விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

- நீங்கள் அல்லது உங்கள் நண்பர் வட்டத்தில் எவராவது பாதிக்கப்பட்டால், நம்பிக்கைக்குரிய ஒரு நபருக்கு இதுபற்றித் தெரிவியுங்கள், ஆலோசனை நிலையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

## பின்தொடர்ந்து துன்பப்படுத்துதல்

எவராவது ஒருவர் இன்னொரு நபரை அவர் தெரியப்படுத்திய விருப்பத்திற்கு மாறாக மீண்டும் மீண்டும் தொடர்பு கொள்வது, சிரமப்படுத்துவது, பின்தொடர்வது அல்லது பரிசுப் பொருட்களை வழங்குவது போன்றவை சம்பந்தப்பட்ட நபருக்கு துன்பம் விளைவிப்பதாகும். இதை பின்தொடர்ந்து துன்பப்படுத்துதல் என்பர். இந்த பின்தொடர்ந்து துன்பப்படுத்தும்-நிகழ்வு உதாரணமாக தொலைபேசித் தொந்தரவு, பயமுறுத்தும் -sms, நாளாந்த மின்னஞ்சல்கள், வேலையிடத்திற்கு வருவது, ஒழுங்காக பரிசுகளை வழங்குவது, முன்னறிவித்தலின்றி வீட்டிற்கு வருவது மற்றும் பொதுவாக வேவு பார்ப்பது மற்றும் கண்காணிப்பது போன்றவையாகும். இவ்வகையான ஒவ்வொரு பின்தொடர்ந்து-துன்பப்படுத்தும் செயற்பாட்டிற்கும் தண்டனை வழங்கலாம் என்பதுடன் இவ்வாறு துன்பம் கொடுக்கும் நபர் தொடர்பு கொள்வதை, சிவில் சட்டத்தின் மூலமாகத் தடை செய்யலாம்.

- நீங்கள் கண்டிப்பாகவும் ஒரேதடவை யாகவும் உங்களுக்கு தொடர்பு கொள்ளுவதில் விருப்பமில்லை என்பதைத் தெரியப்படுத்துங்கள்.
- தொலைபேசி அழைப்பு, மின்னஞ்சல் போன்றவை வந்தால் அவற்றை அலட்சியப்படுத்துங்கள், பரிசுப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளா தீர்கள். இது சிரமமாக இருந்தாலும் விட்டுக்கொடுக்காமல் இருந்து கொள்ளுங்கள்.
- உங்கள் சுற்றாடலிற்கு அறிவித்துக் கொள்ளுங்கள்: குடும்பம், நண்பர்கள், சக தொழிலாளர்கள் மற்றும் அயலவர்களுக்கு. இவர்கள் உங்களுக்கு உதவிசெய்ய முடியும்.
- நபரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அனைத்தையும் திகதி, நேரம், இடம் மற்றும் சாட்சிளுடன் சேர்த்து பதிவுசெய்து கொள்ளுங்கள்.
- நீங்கள் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்! ஆலோசனை நிலையம் மற்றும் போலீசார் உங்களுக்காகவே உள்ளனர்.



## ஒரு குற்றச்செயலில் பாதிப்படைந்தவரானால்

> பயமுறுத்தப்படும் நிலைமை இருப்பின் அல்லது சம்பவம் நிகழ்ந்த பின்பு அவசர இலக்கத்தை அழையுங்கள் 112 அல்லது 117.

> சம்பவ இடத்தை நீங்கள் மாற்றிக்கொள்ளாதீர்கள்.
– தடயங்களை நீங்கள் அழிக்க வேண்டாம்.
– நீங்கள் ஒழுங்குபடுத்தவோ மற்றும் துடைக்கவோ வேண்டாம்.
– அத்துடன் அணிந்திருந்த உடைகளைக் கழுவ வேண்டாம்.

> உடற் உடற்காயத்தை எவ்வளவு விரைவாக இயலுமோ (72 மணித்தியாலங்களுக்கு உள்ளாக) உங்கள் குடும்ப ஆண் அல்லது பெண் வைத்தியர், அல்லது வைத்தியசாலையில் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

## ஒரு ஆலோசனை நிலையத்தை அல்லது போலீசாரை தொடர்பு கொள்ளுங்கள்:

> உதவியைத் தேடுவதற்கு நீங்கள் தாமதிக்க வேண்டாம்!

> ஆலோசனை நிலையங்கள் அடிப்படை ரீதியாக உங்களுக்கு இலவசமாக உதவும்.

> நீங்கள் போலீசாருக்கு அறிவிக்காவிடினும், ஒரு ஆலோசனை நிலையத்தைத் தொடர்பு கொள்ள முடியும்.

> ஆலோசனை நிலையங்கள் உங்கள் சம்மதமின்றி போலீசாருக்கு அறியத்தராது.

> அத்துடன் ஒரு நிச்சயமற்ற வதிவிட அனுமதி வைத்துள்ள நபர்களுக்கும் ஆலோசனை பெற உரிமையுள்ளது.

நீங்கள் போலீசாருக்கு ஒரு குற்றச்செயல் குறித்து அறிவிக்க விரும்புகின்றீர்களா (குற்ற விண்ணப்பம் செய்தல்/குற்றப்பதிவு மேற்கொள்ளல்) நீங்கள் தொலைபேசி அல்லது நேரடியாக சுவிசிலுள்ள எந்தப் போலீஸ் நிலையத்தையாவது தொடர்பு கொள்ளலாம். நாங்கள் உங்களிடம் நடந்த சம்பவம் குறித்து கேட்டுக்கொள்வதுடன், நீங்கள் கூறுவதை எழுதிக் கொள்வோம். ஒரு பாலியல் வன்முறையாக இருப்பின் இயலுமானவரை உங்கள் பாலினத்தைச் சேர்ந்த ஒருவரால் கேட்கப்படுவீர்கள். மொழிப்பிரச்சினை இருப்பின் நாங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரை ஒழுங்கு செய்வோம்.

## குற்ற வழக்குத்தொடரல்

நீங்கள் போலீஸ் நிலையத்தில் ஒரு குற்றப்பதிவைச் செய்தால் நாங்கள் அதுகுறித்து விசாரணைகளை மேற்கொள்வோம். நாங்கள் ஆதாரங்களை, முக்கிய தடயங்களைத் தேடுவதுடன், உங்களுக்கு, தகவல் தரக்கூடிய நபர்களை மற்றும் குற்றம்சாட்டப்படுபவரை கேட்டறிந்து கொள்ளுவோம். மிகவும் சிக்கலான சம்பவங்களின்போது பாதிக்கப்பட்டவர் அல்லாது வேறொரு நபர் அறிவித்தாலும் நாங்கள் விசாரணையை மேற்கொள்வோம். இதன்பின் இதற்கான தண்டனையை அரசுவக்கீல் அல்லது நீதிமன்றம் முடிவுசெய்வர்.

# இங்கு நீங்கள் உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

**அவசர வேளைகள் மற்றும் உடனடி உதவிகள் (இலவச தொலைபேசி இலக்கங்கள், 24 மணித்தியாலமும்)**

போலீஸ் ........ **தொலைபேசி 112 அல்லது 117**
அம்புலன்ஸ்/நோயாளர் சேவை ........ **தொலைபேசி 144**
பெண்களுக்கான போலீசார் தொடர்பு தொலைபேசி (தொலைபேசியில் பதிலளித்தல்:பெண் போலீஸ்மீளவும் அழைப்பார்) ........ **031 332 77 77**
Die Dargebotene Hand - வயதுவந்தவர்களுக்கான அடையாளம் தெரியாத உதவி மற்றும் ஆலோசனை ........ **தொலைபேசி 143**
Pro Juventute - பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான அடையாளம் தெரியாத உதவி மற்றும் ஆலோசனை ........ **தொலைபேசி 147**

**பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆலோசனை**

Opferhilfe Bern பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி Bern ........ **031 370 30 70**
Opferhilfe Biel பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி Biel ........ **032 322 56 33**
Lantana - இளம் யுவதிகள் மற்றும் பெண்களுக்கான பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி, பேர்ண். ........ **031 313 14 00**
Vista - பாலியல் வன்முறை மற்றும் வீட்டுவன்முறையின் போது பாதிக்கப்பட்டவர் களுக்கான உதவி, தூண் ........ **033 225 05 60**
Fachstelle Häusliche Gewalt Stadt Bern - வீட்டு வன்முறை துறைசார் நிலையம், பேர்ண் நகரம் ........ **031 321 63 02**
Frauenhaus Bern - பெண்கள் இல்லம் பேர்ண் ........ **031 332 55 33**
Frauenhaus Region Biel - பெண்கள் இல்லம் பீல் பிரதேசம் ........ **032 322 03 44**
Frauenhaus Thun - Berner Oberland - பெண்கள் இல்லம் தூண் - Berner Oberland ........ **033 221 47 47**
Fachstelle Stalking-Beratung – Bern - பின்தொடர்ந்து துன்பப்படுத்துதல்-துறைசார் நிலையம், பேர்ண் ........ **031 321 68 97**
Zwangsheirat.ch - கட்டாயத் திருமணம் ........ **0800 800 007**

**பொதுவான ஆலோசனை**

frabina - வித்தியாசமான நாடுகளைச் சேர்ந்த உறவுள்ள பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஆலோசனை நிலையம் ........ **031 381 27 01**
ISA - வெளிநாட்டவர்கள்- மற்றும் வெளிநாட்டவர் குறித்த கேள்விகளுக்கான தகவல்- மற்றும் ஆலோசனை நிலையம் ........ **031 310 12 72**

**ஒன்றுசேர்ந்து வாழ்வது குறித்த தகவல் படத்தை நீங்கள் இந்த மற்றும் வேறு மொழிகளில் பின்வரும் இணையத்தளத்தில் காணலாம்: www.police.be.ch**

**Bern Cantonal Police**
Waisenhausplatz 32
3011 Bern

401.646